# ஆசியுரை

**அகிலப் பிரசித்த சிவாசாரியவரர்**

நவாலி அட்டகிரி, யாழ். பெருமாள்கோயில் பிரதம குரு:

**சிவஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள் வழங்கியது**

உலகின் கண்ணே தோன்றிய பல சமயங்களுள் சாலச் சிறந்ததும் முடிவு முதல் இல்லாததுமான சமயம் சைவசமயமாகும். இச்சமய விதிகள் வேதம் ஆகமம், சித்தாந்தம், வேதாந்தம், புராணம், இதிகாசம், ஜோதிஷம், திருமுறை; திருவாசகம் என்னும் முதல் நூற்பொருள்களின் மரபு வழியாக அமைந்தவை. மெய்யடியார்கள் பலர் இதன் வழி வாழ்ந்து முத்தியடைந்து உலகு வாழ வழிவகுத்து வைத்த பெருமை இந்தச் சைவசமயத்திற்கு அணியானது.

இன்றைய உலகில் மக்கள் அல்லற்படும் நிலைக்கு முதற் காரணம் சமய உணர்ச்சியற்ற நூல் உரைகளைவாசித்து அவர்கள் சைவசமய நெறியைத் தவறி நிற்பதேயாகும்.

கிரியா மார்க்கத்தின் வாயிலாக ஆத்மீக நன்மையையும் உலகத்தில் சுபீட்சமான வாழ்வையும் பெறுவதற்குச் சைவ சித்தாந்தம் ஒரு சிறந்த பொக்கிஷம் எனக்கூறுவது மிகவும் பொருத்தமான விஷயம்.

சமுத்திரத்தின் அலைக்கு ஓய்வு கிடையாது. அதேபோல சைவன் எனப்பிறந்தவன் எவனும் மனதை அல்லற் படவிடாது அமைதியாகவும் பக்தியாகவும் சமயப் பற்றுடனும் சமய அறிவுடனும் வாழவேண்டும். இதற்கு உபகாரமாகவே சமய சாஸ்திர நூல்கள் அமைந்து விளங்குகின்றன. இவ்வுண்மை வழிநின்று மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தினர் வெளியிடும் சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள் என்னும் நூல் நிரம்பிய கிரியை பாவனைக் கருத்துக்கள் நிறைந்து சைவமக்கள் இலகுவில் புரிந்து விளங்கக்கூடிய நிலையில் அமைந்து விட்டது நமக் போற்றுதற்குரியது.

அதன் ஆசிரியராக அமைந்த உயர் திரு. மு. கந்தையா ஆசிரியர் அவர்கள் ஏழாலையைச் சேர்ந்தவர். அது இக்கலி காலத்திலும் சைவப்பண்பில் பங்கம் ஏற்படாது வாழும் சிவ நெறிச் செல்வர்கள் நிறைந்த கிராமமாகும்; அன்னாரின் சேவைக்கு இறைவன் கருணையும் மக்களின் அன்பும் பக்தியும் நிதியும் உறுதுணையாக இருக்கவேண்டும். இதுபோன்ற பல அரிய சிவமணம் கமழும் மலர்களை அவர் வாயிலாக நாம் பெற்று உலகத்தில் சைவஞ் செழிக்குமாறு கிரியைகளையும் மாசுருவண்ணம் நடத்த அனைவரும் முன்வரவேண்டுமென உலக பிதா மாதாவாக அமைந்த பார்வதி பரமேஸ்வரன் பாதமலர்களை வணங்கி ஆசி கூறுகிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சுபம்! விஸ்வநாதக் குருக்கள்

# முன்னுரை

சித்தாந்தப் பெருஞ்செல்வர்
**காஞ்சிபுரம் க. வச்சிரவேல் முதலியார்**
[மதுரைப் பல்கலைக் கழகத்துச் சைவசித்தாந்தத்
தத்துவத்துறைத் தனி அலுவலர்]
அவர்கள் வழங்கியது

சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள் என்னும் திருந்திய கருத்துக்கள் அமைந்த இன்றியமையாத இந்நூல், திருவருட்செல்வர் ஏழாலை மு. கந்தையா அவர்களால் தமக்கேயுரிய கலை, ஞானம், ஒழுக்கம் என்பவற்றின் பயனாக எழுதப்பட்டுள்ளது. சிவநெறி நின்று ஒழுகுவோரும் அதுபற்றி உண்மையாக அறிய விரும்புவோரும் இன்றியமையாது கற்றுணர்தற்கு உரியது: வேதசிவாகமம், திருமுறை, சாத்திரங்கள், கிரியாபத்ததிகள் என்பவற்றின் பிழிவாயுள்ளது.

சைவ ஆசாரியர்களும் திருக்கோயிலை நடத்தும் பொறுப்புள்ள செல்வர்களும் அடிப்படையாக உணர்ந்து கொள்ள வேண்டிய கல்வி, அறிவு, ஒழுக்கம், திருக்கோயிலில் நடைபெறும் நித்திய நைமித்திகச் செயல்கள், சைவசமயிகள் சிவஞானங் கிடைத்தற்கு நிமித்தமாகப் பின்பற்றிப் பாதுகாத்து வரும் சிவபூஜாமுறைகள், பூருவ அபரக்கிரியைகள் என்பவற்றின் பண்பும் பயனும், உணர்வு அடிப்படையும் இந்நூலால் நன்கு விளக்கப்படுகின்றன.

நூல் உருவிற் சிறியதாயினும் சைவக் களஞ்சியமாகவே கொண்டு போற்றி உணர்தற்குரிய அரிய நுண்ணிய கருத்துக்களைப் பொதிந்துள்ளது.

இதில் ஓரிடத்தில் சிவபிரான் திரியும் முப்புரம் எரித்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது; அது

''கல்லால்நிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறையூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழ லையே''

என்னும் தேவாரத்தை நினைவூட்டிற்று:

வல் ஆய் எரி: காற்று ஈர்க்கு: அரி கோல் என்றது அங்கியங்கடவுள் அம்பின் வலிய நுதி (முனை); வாயுதேவன் அதன் அலகு; திருமால் அதன் பின்னுள்ள நீண்ட கோல் என்றபடி: சிவபிரான் ஒருவரே கருத்தா. வேதத்திற் கூறப்படும் ஏனைய தேவர் அவரூற் செலுத்தப்படுங் கருவிகள் என்பது தெளிவிக்கப்படுகிறது.

இந்நூலிற் குறித்துள்ளபடி திருக்கோயிற்பூஜை முதலியவை நடைபெறவும் அதற்கு வேண்டிய மனத்திட்பம், உயர் நோக்கம், கல்வியறிவு, ஒழுக்கம் என்பவற்றைத் தமிழகத்தில் உள்ள அர்ச்சகர், பயன்கொள்வோர் எல்லோர் பெற்றுப் பல்லாற்றானுஞ் சிறந்து விளங்கவும் திருவருள் துணை புரிக! நூல் நீடினிது நின்று மக்கள் துயர் தீர்த்து இன்புறச் செய்க! நூலாசிரியர் நீடினிது வாழ்க!

இன்ப அன்பினீர்,

வணக்கம், நலம். இம்முன்னுரை நண்பர், திரு. S. அரசநாயகம் அவர்கள் விருப்பத்தின்படி எழுதப்படுகிறது நூலின் பெருமையை யானும் உணர்ந்துதான் எழுதுகிறேன்.

பல்கலைக் கழகம்
மதுரை 625021
7-9-1978

இங்ஙனம்
அன்புள்ள
க. வச்சிரவேல் முதலியார்

உ

சிவமயம்

## திரு. மு. பசுபதி அவர்களின்

# வாழ்த்துரை

வேதாந்தத் தெளிவு சைவசித்தாந்தம். சைவசித்தாந்த நூல்களில் தலையாயது சிவஞானபோதம்; சிவஞானபோதத்தின் நூலாசிரியர் மெய்கண்டார், பொய்கண்டார் காணப்புனித மெனும் அத்துவித மெய்கண்டார் என்று பாராட்டப்படுகின்றார். சைவ சித்தாந்தம் சர்வசமய சக்கரவர்த்தி என்று ஓரிடத்தில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப்பது ஞாபகத்திற்கு வருகிறது. சைவ சாத்திரங்களின் உட்கிடையாய்-சர்வகலைகளின் முடிமணியாய்த் திகழும் சைவசித்தாந்த விளக்கத்தின் அடிப்படையில் செய்யும் கிரியைகளை எடுத்தியம்புவதே "சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்" என்னும் நூல்.

சிவாலயக் கிரியைகள் பற்றியும் அடியார்கள் மேற்கொள்ளும் விரதங்கள் பற்றியும், பூர்வக் கிரியைகள், அபரக்கிரியைகள் பற்றியும் தெளிவாகக் கூறும் இந்நூலில் சிவாலய உற்சவங்கள் பற்றிய கருத்துக்களை அநுபந்தமாகச் சேர்த்திருப்பது வரவேற்கத்தக்கது.

"வாழ்க்கை வாழ்வதற்காகவேதான்" என்றது அனுபவக் கல்வியின் அரிவரிப்பாடமாக மட்டும் இருக்கக் கூடியது; வாழ்க்கையின் உயரிய நோக்கத்தை அடைதற்குச் சமய சாதனையே மேலானது என்று நூலாசிரியர் முற்பகுதியில் அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

சிவாலயக் கிரியைகளிற் சுத்திகரிப்புக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருப்பது ஆணித்தரமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது; ஆலயங்களில் நடாத்தப்படும் சுத்திகரிப்புக் கிரியைகள் மூலம் ஆலயங்களிலும் அங்குள்ள பொருள்களிலும் சூழலிலும் தெய்வசாந்நித்தியம் மிளிரும் என்பதை இந்நூல்தரும் விளக்கத்தின் மூலம் வாசகர்கள் இலகுவாக அறிந்து கொள்ளலாம்; சுத்தமான சூழ்நிலையிலேயே பக்தி பிரவாகிக்கும்,

பூர்வக் கிரியைகளைப்பற்றி முற்பகுதியில் எடுத்தியம்பும் நூலாசிரியர் ஓருயிர் கருவிற் புகும் அந்த அடிநிலையிலிருந்து அது

எடுத்த உடலை விட்டுக் கழல இருக்கும் நிலை வரையில் அவ்வுயிரின் உடல், உயிர் உள்ளங்களுக்குத் தூய்மையும் வலுவும், உரனும் விளைவிக்கக்கூடிய பலவிதக் கிரியைகள் சைவத்தில் உள்ளன என்பதைப் பலவேறு கிரியாம்சங்கள் மூலம் எடுத்துக்காட்டும் முறை சிறப்பாக இருக்கிறது.

நூலாசிரியர் ஏழாலையூர் பண்டிதர் மு. சந்தையா B.A. அவர்கள் சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் சங்க இலக்கியங்களிலும் மூழ்கித்திளைத்தவர்; சாதனை மிக்கவர்.

நாஸ்திகம் தலைகாட்டுகின்ற இக்காலத்தில் சிவாலயக் கிரியைகளையும் பூர்வ அபரக் கிரியைகளையும் செய்கின்றவர்கள், செய்விக்கின்றவர்கள், வருங்காலச் சந்ததியினர், உள்ளிட்ட யாவரும் பயன் பெறக்கூடிய வகையில் அவர் இவ்வரிய நூலினைத் தந்துள்ளமை யாம் செய்த தவமேயாகும். அன்னாருக்கு நன்றி கூறி அமையாது.

ஊர்கடோறும் சைவசபைகளை ஸ்தாபித்துச் சைவ மரபினைக் காக்க வேண்டும் என்பதே நாவலர் பெருமான் குறிக்கோள்; மிகவும் பழமை வாய்ந்த மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் சைவ உலகு பயன்பெற இந்நூலை வெளியிட முன்வந்தமை மிகவும் பாராட்டுக்குரியது; முன்மாதிரியானது.

'சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்' என்னும் இந்நூல் சைவ ஒளியைத் திக்கெட்டிலும் பரப்பிச் சைவம் மேன்மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

மு. பசுபதி
தலைவர்

உடுவில்; சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில்
1-09-1978, உரும்பராய்.

# நன்றியுரை

சைவமக்களிற் பெரும்பாலோர் தங்கள் சமயக் கிரியைகள் பற்றிய தெளிவான விளக்கமில்லாதிருக்கும் குறைபாடு பற்றி எங்களிடையே சிலகாலமாக விசாரணை நடைபெற்று வந்தது. அவ்விஷயமாக நம்மோடு மனங்கலந்து உரையாடக்கூடிய ஆசிரியரொருவரைத் தந்து, அவ்வுரையாடல்களின் முக்கிய அம்சங்களை ஒரு நூலுருவாக்கவும் வழிவகுத்து, கணிசமான அளவு சுருங்கிய கால எல்லையில் இந்த நூலை வெளியீடாதற்கான இடம், பொருள், ஏவல்களையும் தந்து எம்மை வழிநடத்திய திருவருளுக்கு முதலில் நன்றி கூறுகின்றோம்.

எமது குறைந்தபட்சப் பிரயாசையோடு இந்நூல் வெளிவரும் வகையில் தமது கூடியபட்சப் பிரயாசையைச் செலுத்தி இதனைப் பொருத்தமான முறையில் அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகத்தாருக்கு நன்றி தெரிவித்தல் நமது இன்றியமையாக் கடமையாகும். அச்சுவேலை நெருக்கடியும் கடதாசித் தட்டுப்பாடும் மிக்க இக்காலத்தில் வேலை விரைவில் முடிக்கப்படுதற்கான சிறந்த ஆலோசனைகளையும் சௌகரியங்களையும் தாமாக எமக்குதவிய அச்சக அதிபருக்கு விசேட நன்றி உரியதாகும்.

இந்நூலை எழுதியுதவிய ஆசிரியர் கரிசனைக்கு ஏற்றுற்போல் இதனை உரிய முறையில் ஆராய்ந்து ஆசியுரையும் மதிப்புரையும் வழங்கிய பெரியார்கள், அறிஞர்கள் அனைவருக்கும் என்றென்றைக்கும் நன்றியுடையோம்.

இந்நூல் வெளியீடு காலநிலைமைக்கேற்ற ஒரு நற்பணி என்று அறிஞர்கள் அபிப்பிராயந் தெரிவிக்கின்றபோது எமக்கு மகிழ்ச்சி விளைகிறது. இத்தகைய நற்பணிக்கென்று வாய்த்த எமது இந்தப் பிறப்புக்கும் நன்றி கூறி அமைகின்றோம்.

— மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தார்.

மானிப்பாய்
17-9-78

யாகம் எனப்படும்; அப்பூசையின் விளைவாகவே ஆன்மா சிவத்தோடு ஒன்றுபடும் உண்மைப் பாவனைப் பயிற்சி உளதாவது; இப்பாவனைக்குச் சிவோகம் பாவனை என்று பெயர்;

பூஜையில் ஈடுபடும் ஒருவர் பூஜைக்கிரியைகள் தொடங்கும் முன்னரே இச்சிவோகம் பாவனை பண்ணிக் கொள்ளல் வேண்டும் என்பது விதி. இச்சிவோகம் பாவனைப் பயிற்சியே தன்முதிர்வில், நாற்பாதங்களிலொன்றாகிய யோகநிலையைப் பெறுவதற்கு முன்னோடியநுபவமாயமையும்;

ஞானகுரு வந்து உணர்த்திய பின்தான் யோகங்கைகூடி ஞானம் விளக்கமாகும் என்றது உண்மை. ஆனால், மேற்குறித்த அளவான பக்குவம் ஏற்பட்ட பிறகே தான் ஞானகுரு வருவார்; அப்பக்குவத்தை வருவிக்கும் பயிற்சிக்களம பூஜை, இதுவும் பூஜை மகத்துவங்களிலொன்று.

## பூசையில் அத்துவித விளக்கம் :

ஆலய பூஜையிலே சுவாமிக்கு அபிஷேகஞ் செய்தல், அலங்காரஞ் செய்தல், சாதம், பலகாரம், பழம், வெற்றிலை பாக்கு முதலியன நிவேதித்தல், சுவாமியைச் சயனத்தில் அமர்த்தல் ஆதியன நடைபெறுதல் பற்றிய விளக்கமும் அத்தியாவசியம் நம்மவரால் பெற்றுக்கொள்ளப்படவேண்டியது; விளக்கமில்லாதவிடத்து அச்செயல்களில் உண்மையான பக்தி சிரத்தை தலைக்காட்டாது. இவைபற்றிய விதிமுறைகளை நோக்க இப்போ அவகாசமில்லை இச்செயல்கள் பற்றிய தத்துவப் பின்னணியை மட்டும் இங்கே நோக்குதல் சாலும்.

எந்நிலையிலும், தெய்வம் (சிவம்) நமக்கு வேறாயிருப்பதில்லை. நமது உடலுக்குள்ளே உடலுக்கு வேறான உயிரொன்று இருப்பது போல, நமது உயிருக்குள்ளே உயிருக்கு வேறான சிவம் என்றும் இருந்து கொண்டேயிருக்கிறது. பொருள் தன்மை அளவில் உடலுக்கு உயிர் வேறென்றாலும் கலப்பினால் ஒன்றாகவேயிருக்கிறது. உடலுக்குச் செய்யுஞ் செயல்களினால் உயிர் நேரடியாகத் தாக்கப்படுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். உடலின் ஒவ்வோர் அணுவிலும் உயிர் செறிந்திருக்கும் உண்மை மிக அற்புதமானதுங்கூட. அல்லாவிட்டால் தோற்புறையில் ஒரு சிறு முள்ளைக் குத்த முன்னமே உயிருக்கு நோவதின் அர்த்தமில்லை. இதுபோலவே உயிருக்கு வேறு சிவம் என்றாலும் கலப்பினால் ஒன்றேயாயிருக்கிறது. உயிர் உடலோடு கலப்பினாலொன்றாய் இருந்து உடலை நிலைக்கச் செய்வது போல, சிவம் உயிரோடொன்றாயிருந்து அதை நிலைக்கச்

இவை முற்ற முடியச் சைவசித்தாந்தக் கண்ணோட்டத்தில் அமைந்தன என்பதையும் இங்கும் ஒருக்கால் ஞாபகஞ் செய்து கொள்வோம்.

ஆன்மார்த்தம் பரார்த்தம்:

சிவபூஜை, ஆன்மார்த்தபூஜையென்றும் பரார்த்த பூஜையென்றும் இருவகையாகச் சொல்லப்படுகிறது. இரண்டுக்கும் வெகுதூர வித்தியாசங் கிடையாது. இரண்டும், தன்மையளவில் ஒன்றே. பிரதான கிரியாம்சங்கள் சகலமும் இரண்டுக்கும் ஒருவகையினவே; ஆன்மார்த்தத்துக்குள்ளே பரார்த்தம் இல்லாமலில்லை; பரார்த்தத்துக்குள்ளே ஆன்மார்த்தமும் இல்லாமலில்லை.

சிவம் வியாபகப்பொருள்; அதை முன்னிட்டுச் செய்யும் பூஜையும் பூஜைப்பலனும் வியாபகமேயாம்; எனினும், பூஜிப்பவர் தாம் சிவ பாவனையில் நின்று தம் உயிருணர்வையொடுக்கிப் பூஜையில் நேர்முகமாகச் செலுத்துமளவுக்கு விசேடபலன் பெறுபவராகின்றார்.

பூஜிக்குந் தகுதி ஒரு சிலர்க்கேதான் இருக்கும்; உண்மையுண்மையாகக் கடவுளை வழிபடுந் தகுதியும் அவ்வண்ணமே.

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாலுனை நான்தொழ வேனலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே"

என்ற அப்பர் சுவாமிகள் பாடல் இங்கே கருதத் தக்கது; 'தகுதியுள்ளவர்கள் செய்யட்டும் நாம் அதில் ஈடுபடாதிருப்போமாக' என்பதற்கும் இடமில்லை; அவர்கள் செய்வதைப் பார்த்துப் பிறரும் அவ்வழியில் முயலலாம்; முயலவேண்டும் என்ற உணர்வை இப்பாடல் தருதலைப் பிரதானமாகக் கவனிக்க வேண்டும்.

ஆத்ம ஞானிகளாயுள்ளவர்களே பூஜைக்குத் தகுதியுள்ளவர்கள்; எனினும், அவர்கள் பூஜிக்கும் பரிவையும் பரிமளிப்பையுங் கண்டு மற்றொருவர் தாமும் பூஜிக்க விரும்புதல் சகஜமே. ஆனால் தமக்கியலா நிலையில், அல்லது தமக்குப் பயிற்சி போதா நிலையில் என்செய்வது! தமக்காகவும் ஒருகால் சுவாமியைப் பூஜிக்கும்படி அவ்விருப்ப வழிப்பட்ட ஒருவர் கேட்டுக்கொள்ள, அவர்பாற் கொண்ட கருணையால் ஒரு ஞானி, அது செய்வாராயின் அப்போது அது பரார்த்த நிலைக்கு வந்துவிடும்.

## ஆசிரியரின் வேறு நூல்கள்.

1. மாவைப்பிள்ளைத் தமிழ் — உரையுடன்

வெளியீடு : மாவை முத்தமிழ் மன்றம்.

2. குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையு

வெளியீடு : குழந்தைவேற் சுவாமிகள் சமாதிக் கோ திருப்பணிச்சபை.

3. திருக்குறிப்புத் தொண்டர் புராண ஆறுமு தம்பிரான் உரைவிளக்கக் குறிப்புகள்.

வெளியீடு : யாழ். கூட்டுறவுப் பதிப்பகம்.

4. சித்தாந்தச் செழும் புதையல்கள். (அச்சில்)

வெளியீடு : ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீட

5. நாவலர் பிள்ளைத்தமிழ் — உரையுடன். (அச்சி

வெளியீடு : காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகம்.

6. பெரிய புராணச் சிந்தனைகள்.

(அச்சேற வேண்டிய